Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
THE EELA NADU
தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 (16-1-67) இதழ் 336
பராபவ ஷவ்வால் 4 தை 3 திங்கட்கிழமை

மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன்: 519
நகை மாளிகை
கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் நடைபெறும்

## ஒத்திவைப்பு உத்தரவு வாபஸ் பெறப்பட்டது

கொழும்பு, ஞாயிறு

**ஸ்தலஸ்தாபனத் தேர்தல்கள் யாவும் முன்னர் திட்டமிட்டிருந்தபடி குறிப்பிட்ட திகதிகளில் நடைபெறும்.**

ஸ்தலஸ்தாபன தேர்தல்களை ரத்துச் செய்யுமாறு பத்து நாட்களுக்கு முன்னர் விடுத்திருந்த உத்தரவைக் கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ இப்பொழுது வாபஸ் பெற்றுள்ளதைத் தொடர்ந்தே ஸ்தலஸ்தாபனத் தேர்தல்கள் உரிய காலத்தில் நடைபெறவிருக்கின்றன.

பத்து நாட்களுக்கு முன்னர் கவர்னர் ஜெனரல் விடுத்திருந்த ஒரு விசேஷ 'கஸட்' அறிக்கையில் இவ்வருடத்தில் நடைபெறவிருந்த சகல உள்ளூராட்சித் தேர்தல்களையும் ரத்துச் செய்யுமாறு உத்தரவிட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து இம்மாதஇறுதி முதல் நடைபெறவிருந்த பல கிராமசபைத் தேர்தல்களும் பட்டின, நகர, மாநகரசபைத் தேர்தல்களும் கைவிடப்பட்டன.

நேற்று நள்ளிரவு கவர்னர் ஜெனரல் வெளியிட்ட விசேஷ 'கஸட்' அறிக்கையில் தமது உத்தரவை வாபஸ் பெற்றிருப்பதுடன் உள்ளூராட்சித் தேர்தல்கள் யாவும் முன்னர் நிச்சயிக்கப்பட்ட திகதிகளில் நடைபெறும் என்றும் அறிவித்துள்ளார். ஆனால் இரத்தினபுரி நகரசபைத் தேர்தல் மட்டும் முன்னர் குறிப்பிட்ட திகதியில் நடைபெறமாட்டாது என்றும் ஆகஸ்டில் மாநகரசபையின் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்ட பின்னர் தேர்தல்கள் நடைபெறுமென்றும் அறிவித்துள்ளார். அதுவரையும் இரத்தினபுரி நகரசபை விசேஷ ஆணையாளரின் கீழ் இருக்கும்.

### 298 சபைகளில் தேர்தல்கள்

இம்மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையிலான ஆறுமாத காலத்திலும் 298 உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் நடைபெறும். சில நகரசபைகள் மாநகர சபையின் அந்தஸ்துக்கு உயர்த்தப்படும்.

இரண்டு மாநகரசபைகள் உள்ளிட்டு 3 நகரசபைகள், 2 பட்டினசபைகள், 291 கிராமச்சபைகள் ஆகியவற்றின் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன.

மீசாலை திருட்டு சம்பவம்

## மேலும் ஒருவர் கைது; ஒருவரை பொலிஸார் தேடுகின்றனர்

சாவகச்சேரி, ஞாயிறு

மீசாலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராசையா என்பவரது வீட்டிலிருந்து சுமார் 5000ரூபா பெறுமதியான நகைகளும் பணமும் களவுபோனது சம்பந்தமாக சந்தேகநபர்களைக் கைது செய்வதில் சாவகச்சேரிப் பொலிசார் தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றனர்.

முதலில் கைதுசெய்யப்பட்ட ஐவரில் மூவர் மாஜிஸ்திரேட்டால் விடுதலை செய்யப்பட்டு கணபதி ரத்தினம் பொன்னன் தம்பிராசா, ஆகிய இருவரும் றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

இவர்கள்மூலம் பொலிசாருக்குக்கிடைத்த தகவலைத் தொடர்ந்து இத்திருட்டுக்கு உடந்தையாக இருந்தவரெனக்கருதப்பட்ட திரு ஏ. தில்லைநாதன் என்பவரையும்பொலிசார்கைது செய்து றிமாண்டில் வைத்துள்ளனர் இதில் சம்பந்தப்பட்டவரெனக்கருதப்படும் மற்றொருவரைக் கைதுசெய்வதில் பொலிசாருக்குப்பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

குறிப்பிட்ட சந்தேகநபர் சைக்கிளில்வீதியால் செல்வதை அவதானித்த ஒரு பொலிஸ் அதிகாரி அவரை கைதுசெய்ய முயற்சிக்கையில் அந்தநபர் சைக்கிளை விட்டுவிட்டு வேலியையும் பாய்ந்து ஓடிவிட்டாராம். சைக்கிள் பொலிஸாரிடம் சிக்கியுள்ளது. இவரைக் கைதுசெய்யப் பொலிசார் தொடர்ந்து நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

## இரட்டைத் தலையுடன் பிறந்த அதிசயக் குழந்தை

உடுப்பிட்டி, ஞாயிறு

இரட்டைத் தலையுடன் கூடிய ஓர் அதிசயக்குழந்தை வேறு பல அங்க மாற்றங்களுடன் பிறந்துள்ளது. கரணவாய் தெற்கிலுள்ள மண்டான் குடியேற்றத் திட்டத்திலுள்ள வல்லிபுரம் என்பவரின் மனைவியான சின்னமணி இந்த அதிசய ஆண் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார். சென்ற செவ்வாய்க்கிழமை வீட்டிலேயே பிரசவமான இவ்வதிசயக் குழந்தையின் முகத்தில் இருபக்கங்களிலும் இரு துவாரங்கள் கொண்ட இரண்டு மூக்குகள் உள்ளன. வாயில் இரண்டு நாக்குகளும் அமைந்துள்ளன. ஒருகையில் ஆறுவிரல்களும், கால் ஒன்றில் ஆறுவிரல்களும், மற்றக்கையிலும்காலிலும் ஐந்து விரல்கள் வீதம், மொத்தம் 22 விரல்கள் உள்ளன. இக்குழந்தை பிறக்கும்போதே இருபல்லும் முளைத்திருந்தது. தலை நெற்றியிலிருந்து பிடரிவரை இரட்டைத்தலையுடன் பிறந்த இந்த அதிசயக் குழந்தை ஒருநாள் உயிருடன் வாழ்ந்து மறுநாள் இறந்துவிட்டது.

## வானொலிப் பெட்டிக்கான புதிய லைசென்ஸ்

கொழும்பு, ஞாயிறு

புதிய லைசென்ஸ் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வானொலிப் பெட்டியும் (அது வீட்டு ரேடியோ அல்லது காரில் பூட்டப்பட்டதோ அன்றி ட்ரான்ஸிஸ்டராகவோ இருந்தாலும் சரி) 1-1-67 முதல் பிரத்தியேகமாக லைசென்ஸ் புதுப்பிக்கப்படவேண்டும்.

புதுப்பிப்பதற்கான அறிவித்தலோ அல்லது நினைவூட்டும் கடிதமோ தபாற் பகுதியினரால் அனுப்பப்படமாட்டாது. லைசென்ஸ் உடையவர்கள் ஒவ்வொருவரும் தாமதமின்றித் தம் லைசென்ஸை புதுப்பிக்க வேண்டியது அவர்களுடைய பொறுப்பாகும்.

புதிய லைசென்ஸ்களுக்கோ அல்லது பழைய லைசென்ஸைப் புதுப்பிப்பதற்கோ செய்யப்படும் விண்ணப்பங்கள், திருத்தப்பட்ட புதிய 'ஏ' வடிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இப்படிவங்கள் எல்லாத் தபாற் கந்தோர்களிலும், 'ஏ' பிரிவு உபதபாற் கந்தோர்களிலும்

(8-ம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுப்பகுதியில் பெற்றோர் கலக்கம்

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவுப் பகுதியில் பிள்ளை பிடிப்போர் உலாவுவதாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பும் பெற்றோர் நேரமானதும் பிள்ளைகள் வருகிறார்களா என்று தெருவைப் பார்த்தவண்ணமிருக்கின்றனர். இதற்கெல்லாம் காரணம் சென்ற நாலு தினங்களுக்கு முன்னர் தண்ணீரூற்றில் வசிக்கும் பொன்னுத்தம்பி என்பவருடைய ஒரேயொரு மகன் (வயது 11) இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டதுதான் எனச் சொல்லப்படுகிறது.

பிள்ளைபிடிகாரர் நரபலிக்காகவே இப்பிள்ளையைக் கூட்டிச் சென்றிருப்பார்கள் என்ற சந்தேகம் தற்போது இப்பகுதியில் எழுந்துள்ளது. முல்லைத்தீவுப் பொலிஸார் சகல பொலிஸ்பகுதியினருக்கும் இதுபற்றி அறிவித்திருக்கின்றனர். இருந்தபோதிலும் இதுவரை எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

## வர்த்தக சிப்பந்திகள் சங்க ஊழியர்

### இன்று பொதுக்கூட்டம்

கொழும்பு, ஞாயிறு

இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தைச் சேர்ந்த 1[illegible],000 ஊழியர்கள், நாளை பிற்பகல் 2-30க்கு தங்களது வேலைத்தலங்களிலிருந்து வெளியேறி ஊர்வலமாக 'ஹைட்பார்க்' மைதானத்தைச் சென்றடைவார்கள். இங்கு மாலையில் பொதுக் கூட்டமொன்றில் இவர்கள் கலந்து கொள்வார்கள்.

இந்தச் சங்கத்தைச் சேர்ந்த "டைம்ஸ் ஒப் சிலோன்" பத்திரிகை ஊழியர்கள் நாளை வேலை நிறுத்தம் செய்கின்றனர். வேலை நீக்கம்செய்யப்பட்ட நான்கு ஊழியர்களையும் மீண்டும் வேலைக்கு எடுக்குமாறுகோரி இவர்கள் வேலைநிறுத்தம் செய்கின்றனர். இதன் விளைவாக இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த பத்திரிகைகள் [illegible]

## ஜெர்மன் தூது கோஷ்டியின காங்கேசன்துறை விஜயம்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜெர்மன் பார்லிமென்டரி தூதுகோஷ்டியினர், இன்று காலை காங்கேசன்துறைக்கு விஜயம் செய்து சிமெந்துத் தொழிற்சாலையையும் வேறு சில இடங்களையும் சுற்றிப் பார்ப்பார்கள்.

இத்தூது கோஷ்டியினர் நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இன்று மாலையே கொழும்பு திரும்பும் இவர்கள் பின்பிடித்துறையையும் சென்று பார்ப்பார்கள் எனத் தெரியவருகிறது. இத்தூதுகோஷ்டியினர் இலங்கையில் [illegible] தங்கியிருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோழிக்குஞ்சுகள்:
இனம் பிரியாத ஒருநாள் குஞ்சுகள் Unsexed) பதிவு செய்யாது பெற்றுக் கொள்ளலாம். விலைசதம் எழுபத்தைந்து (75) அ.இ. ந. ஏஜன்சீஸ், அளவெட்டி. 2207

## தேவை

வேலை
அனுபவமுள்ள ட்ரைவருக்கு சொந்தக்காரர் வைத்திருப்பவரிடம் கார் ஓட்டும் வேலை தேவை. சி. வெற்றிவேலு "ஜெயதேவிவாசா" புலோலி மேற்கு. பருத்தித்துறை. 2247

ராக்டர் றைவர்
எனது மேற்பார்வையிலுள்ள தோட்டங்களில் ராக்டரைக் கொண்டு இயக்குவதற்கு ஒரு ராக்டர் றைவர் தேவை. ராக்டர் ஓடும் ஆசெனிங்கடன் மோட்டார் கார், மோட்டார் சைக்கிள் ஓடத்தெரிந்து, தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொண்டு இயக்கக்கூடியவர்களாயிருத்தல் வேண்டும். தென்னந்தோட்ட அனுபவமுள்ளவர்களாயிருத்தல் கவனிக்கப்படத்தக்கது.

நாலு காவல் குடும்பங்கள் தேவை. தோட்டங்களை காவல் காப்பதோடு தோட்ட வேலை செய்யும் அனுபவம் வாய்ந்தவர்களாயிருப்பது கவனிக்கப்படத்தக்கது. கணக்கு வைக்கக் கூடியவர்கள், வருடாந்த சம்பள உயர்வு பெறுபவர் விண்ணப்பிக்க. விண்ணப்பிக்கவிரும்பியோர் கீழ்காணும் விலாசத்துக்கு பதிவுக் கடித மூலம் 28-1-67க்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பவும். க. சுப்பிரமணியம், உலாந்தா கட்டுத்தோட்டம், மன்னார். 2315

## வாடகைக்கு

வீடு:
வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலைக்கு சமீபமாக சகல வசதிகளுடன் ஜஹான் மன்ஸில் கட்டிடத்தில் அறைகள் உண்டு. அணுகவும்: 5, ஸிராஜ்வி வீதி, மொம்சாக் கட்டடம், யாழ்ப்பாணம். 2097

வீடு
கொக்குவில்கிழக்கு பொற்பதி ரோட்டடியில் 1-2-67 தொடக்கம் ஒரு வீடு வாடகைக்குக் கொடுக்க இருக்கிறது. குழாய்த் தண்ணீர், மின்சார வசதி, நல்ல வடிமானம் உள்ளது. பஸ்பாதையில் புகைவிரத நிலையத்துக்கு அண்மையிலுள்ளது. விபரம் தேவையானோர் க. சோமசுந்தரம் யாழ்/மத்திய கல்லூரி அல்லது "முருகன் வாசல்" கொக்குவில் கிழக்கில் தொடர்புகொள்ளவும். 2246

## கல்வி

வகுப்புகள்
ஜீ. சீ. ஈ பரீட்சையில் சித்தியடைந்தோர், பல்கலைக் கழகத்தில் சேர்வதற்காக மார்கழி வர்த்தக உயர்தரப் பரீட்சைக்குக் கணக்கியல், வர்த்தகம், பொருளாதாரம், தமிழ், 45 வருட சேவையுள்ள வர்த்தக ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றன. உடன் விண்ணப்பிக்கவும். விடுதி வசதியுண்டு. வர்த்தகக் கல்லூரி, (ஸ்தாபிதம் 1924) பெண் பாடசாலை, நீதிஸ்தல வீதி, ஆண் பாடசாலை, நீதிவான் வீதி, பருத்தித்துறை. 2245

**மகாத்மா தியேட்டர்**
கெல்லியடி
போயாதினமும் முதல் நாளும் காலை 10 மணி மெட்னி
S.S.R. — விஜயகுமாரி
நடித்த
**வழிகாட்டி**

## நன்றி நவிலல்

காலஞ்சென்ற திரு. இ. பொன்னம்பலம் அவர்களின் ஈமக்கிரியைகளுக்குச் சமூகமளித்தவர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள், ஈமக்கிரியை ஏற்பாடுகளில் உதவி புரிந்தவர்களாகிய அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவிக்க இயலாமைக்குப் பெரிதும் வருந்துகின்றோம். - இ. பொன்னம்பலம் குடும்பத்தினர், இடைக்காடு, அச்சுவேலி. 2251

## குத்தகைக்கு

தோட்டம்
எனது மேற்பார்வையிலுள்ள தொந்தாரிகக் காட்டுத் தோட்டமும், தட்டுவன் கொட்டித் தோட்டமும் இந்த மாதம் 15-1-67 தொடக்கமாக குத்தகை கொடுக்க இருக்கின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் 20-1-67க்கு முன் விண்ணப்பப் பத்திரங்களை ரூபா 50/- கட்டி எனது கந்தோரில்பெற்று 25-1-67க்கு முன் பதிவுக் கடித மூலம் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும். 30-1-67ல் குத்தகைக்காரனோர் தெரிவுசெய்யப் பெறுவர். க. சுப்பிரமணியம், உலாந்தாக்காட்டுத் தோட்டம், மன்னார். 2314

## வைத்தியம

தொய்வு, கசம், நீரிழிவு
ரத்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும் மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் கர்பூரணானந்தர் J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## SALE

Water Pump
Electric Water pump Complete With Over Head Tank With Fittings For Sale. M. Chandru, 55, Main Street, Jaffna. 2250

சங்கானை
### பாடசாலை பஸ் சேவை

சங்கானை, ஞாயிறு
சங்கானை - விக்தவரோதயாக் கல்லூரி பாடசாலை பஸ் சேவையில் இப்பொழுது ஒரேயொரு பஸ் மட்டுமே விடப்பட்டுள்ளது. இதற்குமுன் இச்சேவையில் மூன்று பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. பஸ் இல்லாத காரணத்தினால் பாடசாலைக் குழந்தைகள் பலர் வீடு திரும்புகின்றனர்.

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் Jaffna
தினசரி 2-30, 6-30, 9-45
சனி ஞாயிறு தினங்களில் 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — பானுமதி
நடித்த
**காஞ்சித் தலைவன்**

**யாதவா**
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
எஸ்.எஸ்.ஆர். - சுந்தராம்பாள்
நடித்த
**பூம்புகார்**

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர்-கே. ஆர். விஜயா
நடித்த
**பணம் படைத்தவன்**

## "தொழிலாளர் தினம் பொங்கல்"

வல்வெட்டித்துறை,
"உலகம் உய்ந்திட ஒளியை ஈந்து மழைபெய்திட உறுதுணையாக விளங்கும் ஆதவனுக்கும், தமது இடையறாத உழைப்பினால் உலகத்துயிர்களுக்கு ஊட்டம் தரும் உயர்ந்த பணியைச் செய்யும் உழவர்களுக்கும், மற்றும்பல துறைகளில் தொழில் புரிந்து மனித சமுதாயமுன்னேற்றத்திற்கு பாடுபடும் தொழிலாளர்களுக்கும் நன்றிதெரிவிக்கும் நாளே தைத்திருநாள். நாட்டில் நிலவும் உணவுப் பற்றாக்குறையை நீக்கிட உணவுஉற்பத்தியைப்பெருக்கும் பணியில் யாம் ஈடுபட்டுழைக்க இந்நன்னாளில் உறுதி பூணுவோமாக"

இவ்வாறு நேற்று முன்தினம் கரவெட்டி கிழக்கு இ. மு. சங்கத்தால் நடாத்தப்பட்ட பொங்கல் விழாவிற்கு தலைமை வகித்துப் பேசுகையில் திரு. சி செல்லையா குறிப்பிட்டார்.

மற்றும் திரு. க. கந்தசாமி சொற்பொழிவாற்றும்போது, தமிழ் பேசும் மக்கள் அனைவரும் சாதி, சமய பேதமின்றி கொண்டாடக்கூடிய ஒரே ஒரு தமிழ்த் தேசிய திருவிழா பொங்கல் விழாதான் என வலியுறுத்தினார்.

பல நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## இடமாற்றங்கள்

இளவாலை, ஞாயிறு
கட்டைவேலி கிராமசபையில் கடந்த ஆறு வருடங்களாக, பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. கு. ஆனந்தராசா கல்வீடி உப்போடைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவருக்கு ஊழியர்களால் ஓர் பிரிவுபசாரம் நடாத்தப்பட்டது. இவ்வைபவத்தில் யாழ்ப்பாண உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சி. சி. மாணிக்கவாசகர், அவரின் சேவையைப் பாராட்டிப் பேசினார்.

சுழிபுரம், ஞாயிறு
பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய திரு; நா. வேலுப்பிள்ளை சாவி இந்துக்கல்லூரிக்கு அதிபராக பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி புதிய அதிபராக சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் கடமையாற்றிய திரு. என். சிவஞானம் நியமிக்கப்பட்டுள்ளார்.

சங்கானை, ஞாயிறு
வலி-மேற்கு கூ. மொ. வி. ஸ்தாபனத்தார் இந்தக் கிழமை கூப்பன் கடைகளுக்குக் குடும்ப கப்பல் ஒன்றுக்கு ஒரு அவுன்ஸ் சர்க்கரை மட்டுமே விநியோகஞ் செய்தனர். இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

**REGAL—JAFFNA**
NOW SHOWING
Sidney James
Sylvia Sims
in
THE BIG JOB

## விளம்பரம்

பருத்தித்துறை
மாவட்டக் கோட்டில்
இந்த இலங்கா ஆயுள் காப்புறுதிக் கூட்டு ஸ்தாபனத்தின் முன்னிலையில் விசயத்தில்
மிசலேனியஸ்
வழக்கு இல. 45

இவ்வழக்கில் மேற்சொல்லிய ஸ்தாபனம் குலைக்கப்பட்டிருப்பதால், அந்தஸ்தாபனத்திலிருந்து ஏதுமானம் அல்லது கடன் வருமதியுள்ளோர் தங்கள்சோந்தைகளை இவ்வழக்கில் இவ்விளம்பரம் பிரசித்தப்படுத்தப்படும் தேதியிலிருந்து இரண்டு கிழமைக்குள் இக்கோட்டில் வெளிப்படுத்திப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

கோட்டுக் கட்டளைப்படி,
உத்தியோகக் குலைப்பாளர்
15—1—1967 2183

அளவெட்டி தெற்கு
முத்துமாரியம்மன் கோவிலில்
### பலி நிறுத்துதல்

இவ்வருடம் தொடக்கம் மேற்படி கோவிலில் பலியிடும் வழக்கம் நிறுத்தப்பட்டுள்ளது. தை மாதம் 1-ம் திகதி தொடக்கம் (14-1-67) காலையும் மாலையும் பூசை நடைபெறும்.
கோவில் மணியத்திற்காக
ச. சுப்பிரமணிய ஐயர்.
2184

### மலிவு விற்பனை

31-1-1967
வரைக்கும்
மூக்குக் கண்ணாடிகள்
பிறேம்கள்
முதலியன
25% சதவீதம் கழிவுடன்
விற்பனையாகிறது.
பல் வேலைகளுக்கும்
**அரைச்சலார்**
எஸ். எம். பெர்னாண்டோ
18, பிரதான வீதி,
1-ம் குறுக்குத்தெருச் சந்தி,
யாழ்ப்பாணம் 1051


ஆடவர்களுக்கு
அதிக சக்தி தேவை. வலியிழந்து பொலிவிழந்து வாடி நிற்கும் ஆடவர்களுக்கோர் வரப்பிரசாதம்.
**விட்டாடோன் வில்லைகள்**
வாலிபர்களைப் போல் வலுவூட்டி இன்பம் பெருக்கி உடன் பலன்தர உத்தரவாதமானது. பலன் ஒருபோதும் தவறாது. எல்லா கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.
விலை ரூ. 7-50
(தபால் செலவு சதம் 50)
விநியோகஸ்தர்கள்:
**மெட்ரோ ஏஜென்ஸி,**
235 1/1, நொரிஸ் ரோட்,
கொழும்பு.

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

# இப்பொழுது திரையிடப்படுகிறது!

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | ராஜ் (நீர்கொழும்பு) | நவா (கொம்பனித்தெரு) |
| வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) |
| மோடேர்ன் (பதுளை) | லக்ஷ்மி (ரத்னபுரி) | விஜிதா (ஹட்டன்) |

ஆண்டவன் உலகத்தின் முதலாளி. அவனுக்கு நான் ஒரு தொழிலாளி. அன்னை உலகின் மடியின் மேலே அனைவரும் எமது கூட்டாளி.



**எம்.ஜி.ஆர். - கே.ஆர். விஜயா**
எம். ஆர். ராதா, அசோகன், நம்பியார்,
நாகேஷ், மனோரமா
நடித்த
**தேவர் பிலிம்ஸ்**
# தொழிலாளி
டைரக்ஷன்: திருமுகம்.
இசை: திரையிசைத் திலகம் கே.வி. மகாதேவன்

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**
கௌரவ நீதிபதி திரு. சிவசுப்பிரமணியத்துக்கும்
திருமதி சிவசுப்பிரமணியத்துக்கும்
**விருந்து வைபவம்**
கல்லூரியில் ஜனவரி 23-ம் திகதி திங்கட்கிழமை
இரவு 8 மணிக்கு
21—1—67 இல் விருந்து ஜாபிதா முடிவடையும்.
பி. சிவசோதி
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கௌரவகாரியதரிசி
15-1-67. 2182

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்காவலருக்கு இராணுவப் பயிற்சி

## உயர் அதிகாரிகள் பலர் கைது

ஹாங்காங், ஜன. 15

சீன இராணுவத்தைச் சேர்ந்த பல இராணுவ உயர் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்கள் மா-ஸே-துங் எதிர்ப்பாளர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஐந்து இராணுவ மார்ஷல்கள் மா-ஸே-துங்கை ஆதரிப்பதாகத் திருமதி மா-ஸே-துங் தெரிவித்துள்ளார்.

(உத்தியோக பூர்வமான) இராணுவ பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியொன்றில் சீன இராணுவத்தால் குழப்பமான நிலைமை உருவாகியிருப்பதை ஒப்புக் கொண்டுள்ளது.

சீன இராணுவத்திலுள்ள மா-ஸே-துங் எதிர்ப்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்குமிடையே கைகலப்புகள் இடம்பெற்று வருகிறதென்றும் சீன இராணுவத்தில் முழு அளவில் கலாசாரப் புரட்சி நடைபெறவேண்டுமென்றும் இப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

பீகிங் வானொலி கலாச்சாரப்புரட்சி திவெத்துக்கும் ரஷ்ய-சீன எல்லையிலுள்ள பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

செங்காவலர் இராணுவத்தில் சேர்க்கப்படுவார்கள் என்றும் இதற்கு முன்னோடியாக செங்காவலருக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்படுவதுடன் அரசியல் துறையிலும் பயிற்சி அளிக்கப்படுமென்றும் பீகிங் வானொலி கூறியது.

இதற்கிடையே கலாச்சாரப்புரட்சி சபையின் தலைவர் விலக்கப்பட்டுள்ளதாகவும் வேறு ஒருவர் இப்பதவியில் அமர்த்தப்பட்டுள்ளதாகவும் ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

## 'யு தாண்ட் கருத்தை ஏற்க முடியாது'

மணிலா, ஜன. 15

வியட்னாம்பற்றிக் கடந்த செவ்வாயில் நியூயோர்க்கில் நடந்த பத்திரிகை மகாநாட்டில் ஐ. நா. பொதுக் காரியதரிசி யூ தாண்ட் தெரிவித்த சில கருத்துக்களுக்கு பிலிப்பைன்ஸ் வெளிநாட்டு மந்திரி நாஸிஸோ ரமோஸ் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார்.

பத்திரிகைகளுக்கு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்திருப்பதாவது: ''வியட்காங்கியர் ஹனோயின் கைப்பொம்மைகளல்ல என்ற அவரது (யு தாண்டின்) கூற்றை என்னால் ஏற்க முடியாது. அத்துடன், தென்வியட்னாம் மேற்கத்தைய நாடுகளின் நலனுக்கும், பாதுகாப்புக்கும் அவசியமான ஒரு கேந்திரஸ்தானமல்ல என்ற அவர் தெரிவித்துள்ள கருத்தையும் நான் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கிறது.''

(பி டி ஸி)

## 203 அமெரிக்கவிமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன

ஹொங்கொங், ஜன.15

லாவோஸில் உள்ள கம்யூனிஸ்ட் படைகள் கடந்த வருடம் 203 அமெரிக்க விமானங்களைச் சுட்டுவீழ்த்தியதாகப் பதெத்லாவோ ரேடியோ அறிவித்ததாக வட வியட்னாம் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

(பி டி ஸி)

## பஸ விபத்தில் எண்மர் மரணம்

ஸியோல், ஜன. 15

இங்கிருந்து 70 மைல் தொலைவிலுள்ள ஓரிடத்தில் ரோட்டிலிருந்து விலகி ஓடிய பஸ், ஆறொன்றினுள் விழுந்ததன் விளைவாக, 8 பிரயாணிகள் கொல்லப்பட்டனர். 31 பேருக்குக் காயம் ஏற்பட்டது. எல்லாமாக நாற்பது பிரயாணிகள் இப் பஸ்ஸில் சென்றனர்.

(பி டி ஸி)

## டோகோ புரட்சி

டோகா, ஜன. 15

நேற்று முன்தினம் டோகோ நாட்டில் நடைபெற்ற இராணுவப்புரட்சி, கடந்த மூன்று வருடங்களில் ஆபிரிக்காவில் நடந்த 17-வது இராணுவப் புரட்சியாகும். இவற்றில் 13 இராணுவப் புரட்சிகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

(பி டி ஸி)

## 'மா சே துங்கின் நிலை ஸ்திரமானது'

### தென் கொரியா கருத்து

ஸியோல், ஜன. 15

சீனாவில் தற்போது நடந்து வரும் தகராறு 'அவ்வளவு மோசமானது' எனத்தான் கருதவில்லையெனத் தென் கொரியா வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

மாசேதுங்கின் கொள்கை, எண்ணம் ஆகியவற்றுக்கெதிராக கட்சி, அரசாங்கம், இராணுவத்தில் கணிசமான தொகையினர் இருக்கக்கூடுமேயானாலும், சீனாவில் மாசேதுங்கின் நிலை ஸ்திரமானதெனவே கருதுவதாகவும் அது மேலும் தெரிவித்தது.

(பி டி ஸி)

## 2 சீன விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன

தைப்பே, ஜன. 15

தைவான் ஜலசந்தியில் குமாய்த் தீவுக்கு அருகே நடைபெற்ற விமானச்சண்டையில் இரண்டு சீன கம்யூனிஸ்ட் மிக் விமானங்களை கோமின்டாங் சீன விமானப்படை சுட்டுவீழ்த்தியதாக கோமின்டாங் அரசாங்கம் அறிவித்துள்ளது.

தேசிய சீன வேட்டை விமானங்களுக்குச் சேதமில்லை என்றும், அவை பத்திரமாகத் திரும்பின என்றும் பாதுகாப்பு இலாகா அறிவித்தது.

சீனாவில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் குழப்பமான நிலைமையைப் பயன்படுத்தி அங்கு, கோமின்டாங் படையெடுக்குமா என்று கேட்டதற்கு தாக்குதல் நடத்தத் தக்க தருணத்துக்கு ஜெனரல் ஷேக்குருப் படைகள் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகக் கோமின்டாங் அரசாங்க அதிகாரியொருவர் கூறினார்.

# அஸாம் ராஜ்யம் சீரமைக்கப்படும்?

## பிரதமர் இந்திரா தகவல்

கோழிக்கோடு, ஜன. 15

அஸாம் ராஜ்யத்தைச் சீரமைப்பதால் அஸாம் மலைப் பகுதி மக்களின் பிரச்சினை தீர்ந்துவிடலாம் என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இங்கு தெரிவித்துள்ளார்.

இங்கு நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் தான் அவர் இவ்வாறு கூறினார். அஸாம் மலைப்பகுதி மக்களின் பிரச்சினைபற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில், அஸாம் பிரச்சினை மற்றைய ராஜ்யங்களின் பிரச்சினைகளைப் போன்றதல்ல என்றும் இப்பிரச்சினையை ஒரேநோக்கில் பார்க்கக் கூடாதென்றும் கூறினார்.

பூரி சங்கராச்சாரியாரின் உண்ணாவிரதம் பற்றி பிரதமரிடம் கேட்கப்பட்டபொழுது உண்ணாவிரதத்தை நிறுத்துமாறு எந்த தலைவர்கள் கோரிக்கை விடுத்தும் அவர் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட மறுத்துள்ளார் என்றும் பசுவதையைத் தடை பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கம் தனது நிலைமையைத் தெளிவாக விளக்கிவிட்டது என்றும் கூறினார்.

அரசியல் கண்ணோட்டம் இல்லை என்றால் ஏன் உண்ணாவிரதத்தை பூரிசுவாமிகள் நீடிக்க வேண்டும் என்றும் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கேட்டார்.

இந்தியப் பொதுத்தேர்தலுக்கு முன்னர் திரு. ஷேக் அப்துல்லா (முன்னாள் ஜம்மு-காஷ்மீர் பிரதமர்) விடுதலை செய்யப்படுவாரா என்று நிருபர் ஒருவர் கேட்டதற்கு, சாதகமான நிலை இல்லை என்று பிரதமர் இந்திரா பதிலளித்தார்.

# பஹாமஸ் பிரதமர் இன்று பதவியேற்பு

நஸ்ஸோ, ஜன 15

பஹாமாஸின் புதிய பிரதமராக திரு. பின்லிங் நாளை பதவியேற்பார். புதிய அரசாங்கமொன்றை அமைக்கும்படி இவர் கவர்னரினால் கோரப்பட்டுள்ளார்.

அமெரிக்க நாடான பஹாமஸ், 4,404 சதுரமைல் பரப்பை உடையது. சுமார் ஒரு லட்சத்து பதினையாயிரம் சனத்தொகை கொண்டது. 300 தீவுகளை இது கொண்டிருந்த போதிலும் 20 தீவுகளில் மட்டுமே மக்கள் நடமாட்டமிருக்கிறது. பஹாமஸ் புளோரிடாவுக்கு தெற்கே, கியூபாவுக்கு வடக்கே அமைந்திருக்கின்றது.

# நிக்ருமா ஆதரவாளர் மீது காஜுவில் விசாரணை

அக்ரா, ஜன. 15

கானாவின் முன்னாள் அதிபர் டாக்டர் நிக்ருமாவின் ஆதரவாளர்கள் பலர், விசாரணை செய்யப்படவிருப்பதாக இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நாசவேலை செய்ததாகவும், செய்யத் திட்டமிட்டதாகவும், பலரைக் கொலைசெய்ய இரகசியக் கூட்டங்கள் நடத்தியதாகவும் இவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

விசேஷ விசாரணை மன்றங்களில் இவர்கள் விசாரிக்கப்படுவார்கள்.

## தூதுவரை திருப்பி அழைத்தது

தாய்பெய், ஜன. 15

சீனக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் வலியுறுத்தலுக்கு விட்டுக் கொடுத்து, அண்மையில் மாக்கோவில் நடைபெற்ற சம்பவங்களின் போது போர்த்துக்கேய அரசாங்கம் நடந்து கொண்ட முறையை ஆட்சேபிக்குமுகமாகத் தேசிய சீனா லிஸ்பனிலுள்ள தனது தூதுவரைத் திருப்பி அழைத்துவிட்டதாகத் தேசிய சீனா வெளிநாட்டு விவகார அமைச்சுத் தெரிவித்திருக்கிறது.

(பி டி ஸி)

## நியமனம்

சுழிபுரம், ஞாயிறு

தொல்புரம் புதிய பாணுவெட்டி அரசினர் வைத்தியசாலைக்கு அப்போதிக்கரியாக செம்பியன்பற்றைச் சேர்ந்த திரு. கி. என. மூர்த்தி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## கெயிஸிங்கரின் பிரான்ஸ் விஜயம்

பாரிஸ், ஜன. 15

ஜெர்மனிக்கும் பிரான்சுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கத்துடன், மேற்கு ஜெர்மன் தலைவர் கேட் ஜோர்ஜ் கெயிஸிங்கர், பிரெஞ்சுத் தலைவர் டி கோலுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்காக பாரிஸ் சென்றுள்ளார். தற்போது இவ்விரு தலைவர்களுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

(பி டி ஸி)

## சீன கம்யூனிஸ்ட்கட்சி மகாநாடு

பிராக், ஜன 15

சீனக் கம்யூனிஸ்ட்கட்சி தனது 9-வது மகாநாட்டை-1958-க்குப்பின் முதற்தடவையாக இவ்வருடத்தில் கூட்டுமென பீகிங்கில் விநியோகிக்கப்பட்ட சுவரொட்டிப் பிரசுரங்கள் தெரிவிப்பதாக செக்கோஸ்லோவாக்கியா செய்திஸ்தாபனமான 'செதெக்கா' அறிவித்துள்ளது.

(பி டி ஸி)

## மலேஸிய விமானம் நொறுங்கியது

புருணய், ஜன. 15

இங்கிருந்து வடக்கேயுள்ள சபொன்றில் மலேஸிய விமானப்படையைச் சேர்ந்த ஒரு விமானம்விழுந்ததன் விளைவாக விமான ஓட்டி ஒருவர் இறந்தார். இருவருக்குக் காயமேற்பட்டது.

(பி டி ஸி)



வியட்காங்கியரினால் கைது செய்யப்பட்டு வியட்காங் தடுப்பு முகாமில் ஒரு மாதமிருந்தபின்னர் அமெரிக்க நடவடிக்கைகளினால் விடுவிக்கப்பட்ட 23 வயதுள்ள முன்னாள் வியட்காங் இராணுவ வீரர் ஒருவர் தென் வியட்னாம் தாதியொருவரினால் பரிசோதனை செய்யப்படுகிறார். தடுப்பு முகாமில் தங்களுடனிருந்த 70 கைதிகள் மாண்டனர்என்று இவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நான் அஹிம்சை என்ற சாஸ்திரத்தைத் தருவித் தருவிப் பார்க்கும் ஒரு ஏழை ஆராய்ச்சியாளன். கண்ணுக்குத் தென்படாமல் மறைந்திருக்கும் அதன் ஆழங்கள் என் சக ஊழியர்களைத் தடுமாறச் செய்கின்றன.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

ELANADU National Tamil Daily, Post Pox 49 JAFFNA
Telegram ELANADU Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு தை மீ 2உ (16-1-67)


## நிர்வாக உறுதி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன நிர்வாகிகள் சபையில் தமிழ்ப் பகுதி நலனைக் கவனிக்கும் பொருட்டு தமிழர் ஒருவர் நியமிக்கப்படுவாரென்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அறிவித்திருக்கிறார். சபையின் அங்கத்தவர்கள் முதலில் நியமிக்கப்பட்டபோது தமிழர் ஒருவர் நியமிக்கப்படாததற்காக பிரதமர் வருத்தமும் தெரிவித்திருக்கிறார். நேர்ந்துவிட்ட தவறை உணர்ந்து திருத்திக் கொள்வதற்கு முன் வந்த பிரதமர் பாராட்டுக்குரியவர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன சபைக்கு ஐந்து அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர். இவரில் தமிழர் ஒருவரும் இடம்பெறவில்லை. இலங்கையில் தமிழ் மக்களும் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட மக்களும் இந்நாட்டின் இரண்டாவது பெரிய சமூகமாக வாழ்கின்றனர். தமிழ்க்கலை, கலாசாரம் இங்கு வளர்க்கப்பட வேண்டும். அவற்றை முன்னேற்றுவதற்கு முயற்சி செய்யப்படாவிட்டாலும் அவற்றின் வளர்ச்சிக்குப் பாதகம் ஏற்படாமலாவது பார்த்துக் கொள்ள வேண்டும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன தேசிய, வர்த்தகப் பகுதிகள் தமிழ் நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்புகின்றன. இந்த நிகழ்ச்சிகள் தமிழ்க்கலை, கலாசாரத்தைப் பாதுகாக்கக் கூடியனவாகவும் தமிழ் பேசும் மக்கள் விரும்பி அனுபவிக்கக் கூடியனவாகவும் இருக்க வேண்டும். இந்நிகழ்ச்சிகளைப் பற்றிக் கவனித்து நடவடிக்கை எடுப்பதற்கும் தமிழ்க் கலைஞர்கள் வாய்ப்பும் மதிப்பும் பெறவும் சபை நிர்வாகிகள் சபையில் தமிழர் ஒருவர் இடம்பெற வேண்டியது அவசியம். சபை நியமனத்தில் தமிழர் இடம் பெறத் தவறியதைக் கண்டு தமிழ்பேசும் மக்கள் கவலையடைந்தனர். தேசிய அரசாங்கம்கூட தமிழ்மக்களையும் தமிழ்க்கலை, கலாசாரங்களையும் புறக்கணிப்பதாகக் கருதி அச்சமடைந்தனர். இதை நாமும் இப்பகுதியில் சுட்டிக்காட்டியிருந்தோம். தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளரும் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் இக்குறையை எடுத்துக்காட்டியிருந்தனர். தவறை உணர்ந்து கொண்ட பிரதமர், திரு. செல்வநாயகத்துக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன சபைக்கு விரைவில் தமிழர் ஒருவர் நியமிக்கப்படுவாரென்று தெரிவித்திருக்கிறார். இது மகிழ்ச்சியளிப்பதாகும்.

ஆனால் இதுபோன்ற விஷயங்களில் முதலில் தவறு ஏற்பட அனுமதித்துவிட்டுப் பின்னர் திருத்திக் கொள்வது, வீண் பிரசாரங்களுக்கும் தப்பபிப்பிராயங்களுக்கும் இடமளிப்பதாகும். "தமிழரசுக்கட்சியினரின் நிர்ப்பந்தத்துக்குப் பிரதமர் பணிகிறார்" என்றும் "தமிழரைப் புறக்கணிக்கும் அரசாங்கம் ஏதோ கண்துடைப்பு வேலைகளைச் செய்கிறது" என்றும் இருதரப்பிலுமுள்ள தீவிரவாதிகள் பிரசாரம் செய்து வகுப்பு வேற்றுமையைத் தூண்டிவிட முயற்சி செய்ய இது போன்ற சந்தர்ப்பங்கள் பயன்படும்.

ஒரு சபையின் நியமனத்தில் மட்டுமல்ல, உத்தியோக மொழி அமுல், தமிழ் மொழிச் சட்டவிதிகள் அமுல், உணவு உற்பத்தித் திட்டம், கல்வித்திட்டம் முதலிய சகல அலுவல்களிலும் நிலைமையை நன்கு ஆராய்ந்து அதன் பின்னரே ஒரு முடிவுக்கு வந்து அதைச் செயல்படுத்த வேண்டும்.

எதையும் 'இப்போதைக்குச் சமாளிக்கலாம்' என்ற மனப்பான்மை நல்லதல்ல. பிரதமரிடமும் அரசாங்கத்திடமும் இந்த மனப்பான்மையே அதிகம் இருப்பதாகத் தெரிகிறது. இது 'அப்போதைக்கப்போது' பிரச்னைகளைச் சமாளிக்க உதவினாலும் நிரந்தரமாக நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்கவோ, நாடு முன்னேறவோ உதவியளிக்கமாட்டாது. தமிழ் மக்களின் அன்பையும் ஆதரவையும் பெறுவதற்காக தமிழ் மொழிச் சட்டவிதிகளைக் கொண்டு வந்து நிறைவேற்றிவிட்டு சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக சிங்களச் சட்டத்துக்கு விதிகளைக் கொண்டு வருவதும் இருபகுதியினரையும் சமாளிக்கலாம் அல்லது "ஏமாற்றலாம்" என்று நினைக்கலாம். ஆனால் இது தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதாகவே முடியலாம்.

எனவே எந்த ஒரு காரியத்தைச் செய்யு முன்னரும், இதைச் செய்தால் இப்படிவரும், இதன் சாதக பாதகங்கள் இப்படியிருக்கும் என்று தீவிரமாக ஆராய்ந்து அதன் பின்னர் முடிவு செய்ய வேண்டும்: அதன் பின்னர் அதைச் செயல்படுத்த வேண்டும். பின்னர் எதற்கும் வளைந்து கொடுக்கவோ பணிந்து கொடுக்கவோ அவசியம் ஏற்படாது. இதுவே உறுதியான நிர்வாகத்துக்கு வேண்டியது.

யாழ்ப்பாணத்தில் நாளை ஆரம்பம்

## தமிழில் விஞ்ஞானம் பற்றிய முதற் கருத்தரங்கம்

உலகில் மாற்றங்கள் ஏற்படும்போது எதிர்ப்பு ஏற்படுவதும், இன்னல்கள் குறுக்கிடுவதும் இயல்பு என்பது சரித்திரம் சுட்டிக்காட்டும் உண்மை. எமது நாட்டில், உதாரணமாக இலவசக்கல்வி, பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றமை ஆகியவற்றுக்கும் எதிர்ப்பும் இன்னல்களும் ஏற்பட்டன. எனினும் நியாயபூர்வமான இவ்விடயங்கள் வெற்றியடைந்தன. அதேபோலவே சுயமொழியில் விஞ்ஞான பாடங்கள் போதிக்கப்படுவதற்கும் எதிர்ப்பும் இன்னல்களும் ஏற்பட்டன. ஆனால் சுயமொழிமூலம் விஞ்ஞான போதனை மகத்தான வெற்றிகரமான சாதனையாகியது என்பதை பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) பரீட்சைப் பெறுபேறுகள் நிரூபித்துவிட்டன.

பொதுத் தராதரப் பத்திர உயர்நிலை வகுப்புகளிலும் விஞ்ஞான பாடங்களைச் சுயமொழியிற் கற்பிக்க ஆரம்பித்துள்ள இன்றைய காலகட்டத்திலும் இன்னல்களையும் எதிர்ப்புகளையும் எதிர்நோக்கி நிற்கவேண்டியுள்ளது. உதாரணமாக போதிய விஞ்ஞான பின்னணி நூல்களும், துணை இலக்கியங்களும், பாடநூல்களும் நமது மத்தியில் இல்லையென்பது உண்மை.

உலகின் பல பாகங்களிலும் நடக்கும் விஞ்ஞான மாற்றங்கள், புதிய கண்டுபிடிப்புகள், விஞ்ஞான படங்கள், விஞ்ஞான வெளியீடுகள் ஆகியன சுயமொழியில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கிடைப்பதில்லை. இவ்வித பிரச்னைகள் பற்றிய கருத்துவேறுபாடுகள் இவைகளை நீக்குவதற்கு வேண்டிய எண்ணங்கள் ஆசிரியர், மருத்துவர், ஆராய்ச்சியாளர், பொதுமக்கள் ஆகியவர்கள் மத்தியிலே இருந்தபோதிலும் அவற்றை எல்லோரும் ஒருமிகுசேர்ந்து விவாதித்தது இதுவரை இடையாது.

அவ்வித சந்தர்ப்பத்தை தைமே 17,18ந் தேதிகளில் நடக்கும் கருத்தரங்கம் சகல கல்விமான்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பொதுமக்களுக்கும் அளிக்கவிருக்கிறது.

இக்கருத்தை, தமிழில் விஞ்ஞானக் கல்வி விருத்திக்கான நிறுவகமும், வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கமும் ஏற்பாடுசெய்துள்ளன.

இக்கருத்தரங்கம் யாழ். மத்தியகல்லூரி மண்டபத்தில் 17, 18ந் தேதிகளில் காலை 9-30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறும். இது நான்கு பருவங்களாக வகுக்கப்பட்டு நான்கு தலைப்புகளில் கருத்துப் பரிமாறல் நடைபெறும்.

தலைப்புக்களாவன:

(அ) கலைச்சொல்லாக்கம்.

(ஆ) இன்றைய விஞ்ஞானக் கல்வியில் ஆசிரியரின் இடம்.

(இ) விஞ்ஞான அறிவை ஜனரஞ்சகப்படுத்தல்.

(ஈ) விஞ்ஞான நூலாக்கமும் வெளியீடும்.

ஒவ்வொரு தலைப்பிலும் மூன்று கட்டுரைகள் வாசிக்கப்பட்டு அவற்றின் தொடர்பான கருத்து பரிமாறப்படும். விஞ்ஞானக் கல்விக்குப் போதிய தமிழ் நூல்கள் இல்லையென்னும் அபிப்பிராயத்தை மாற்றும் நோக்கமாக இருநாள் பிற பகல்களில் தமிழில் உள்ள விஞ்ஞான நூல்கள் காட்சிக்குவைக்கப்படும். அதைத் தொடர்ந்து விஞ்ஞானக் கல்விக்கு உதவியான படக்காட்சிகள் நடைபெறும்.

தமிழில் விஞ்ஞானம் பற்றிய முதல் கருத்தரங்கம் இதுவாகும். இதுபோன்ற கருத்தரங்குகள் தமிழர் வாழும் பல பிரதேசங்களில் நடாத்த எங்களால் இயன்ற முயற்சிகளை நாம் எல்லோரும் எடுக்கவேண்டும். இவ்வித கருத்தரங்குகள் மூலம் பலதரப்பட்ட கொள்கைகள், கருத்துகள், அபிப்பிராயங்கள் ஆகியவற்றை நாம் அறியவும் எதிர்வாதங்களுக்குத் தகுந்த விடையளிக்கவும், ஆக்கபூர்வமான ஆலோசனைகளை ஏற்று அதற்றைச் செயற்படுத்தவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

இவ்வித கருத்தரங்கு சமுதாயத்தின் ஒருசாராருக்கு மட்டுமன்றி ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள், கல்விமான்கள், பொதுமக்கள் ஆகிய சகலருக்கும் பயன்படும் என்பது எமது எண்ணம். எனவே நாட்டின் முன்னேற்றத்தையும், எதிர்காலக் கல்வியின் அபிவிருத்தியையும் கருத்திற் கொண்ட அனைவரையும் இக்கருத்தரங்கில் பங்குபற்றுமாறு தாழ்மையுடன் அழைக்கின்றோம்.

பணிமுறைச் செயலாளர், தமிழில் விஞ்ஞான விருத்திக்கான நிறுவகம், கொழும்பு.

பொதுச்செயலாளர், வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கம்.

## கல் வீசும் கழுகு

குடுமி சாஸ்திரக்காரனின் குடுமி கூண்டிலிருந்து வெளிப்பட்டவுடனே ஓர் ஏட்டை இழுத்து உங்கள் சோதிடத்தைத் தெரிவிக்கின்றதல்லவா? இது பலகாலப் பயிற்சியால் வந்த பழக்கம். இவ்வித பயிற்சி இல்லாமலேயே இயற்கையாக ஒரு கல்லைத்தூக்கி வீசும்பட்சி ஒன்று கழுகு ஆபிரிக்காவில் வசிக்கிறது.

அங்கே பாலைவனத்து மணலில் நெருப்புக்கோழி என்னும் தீப்பறவை உரித்த தேங்காய்அளவு பெரிய முட்டைகளை இட்டுவைக்கும். இவை மிகவும்ருசியானவை. தீப்பறவை வீட்டை விட்டு வெளியே போயிருக்கும் சமயம் ஒருவித கழுகுகள்திடீர்த் திடுதிப்பென்று வந்து சிறு கற்களைச் சொண்டுகளில் பொறுக்கிக்கொண்டு ஆகாயத்தில் பறந்து வந்து அம் முட்டைகள்மீது வீசும். பருத்துப்பாய்ச்சல் குண்டு வீச்சுக்கு இதை ஒருவிதமாக ஒப்பிடலாம்.

### நாட்டிலும் நகரிலும்

தீக்கோழிமுட்டை, கோழிமுட்டையைப் போல், இலகுவில் உடையமாட்டாது, அதன்கோது கொஞ்சம் தடிப்பானது, ஏழெட்டு எறிகள் விழுந்தபின்புதான் முட்டை ஒருவாறு வெடிக்கும். உடனே இக்கழுகுகள் கீழே இறங்கிவந்து முட்டைகளைக் குடித்து வயிற்றை நிரப்பும்.

பறவைகளும் விலங்குகளும் இப்படிப் புத்திசாலித்தனமாக நடந்துகொள்வது மிகவும் அபூர்வம் என்று இந்தக் கழுகை அவதானித்த விலங்கியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். மனிதர்களிடம் எதிர்பார்க்க முடியாதளவு இது உபயோகிக்கின்றதாம்.

இவைபெல்லாம் பெரிய ஆச்சரியமாக எனக்குப்படவில்லை. நமது காக்கையார் இருக்கிறாரே, அவரைப்போல முனிசாலி விலங்கினத்திலோ பறவையினத்திலோ வேறெவரும் இல்லையென்று சில மேனாட்டு நிபுணர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் காக்கையாரின் ஒரு குறைபாடு. அவர் பலமான திடப்பொருள்களை அலகில் கௌவிக்கொண்டு பறந்து போய்விடுவாரே யன்றி, இந்த ஆபிரிக்க கழுகைப்போல, குறிபார்த்து எறியத் தெரியாது.

எனது மூக்குத்தூள் டப்பிகளில் கமார் அரை டசினுவது காக்கையாரிடம் அகப்பட்டு ஒருவருடமாக வீட்டுக்கூரையில் தங்கியிருந்து அடுத்த வீட்டுமேய்ச்சலுக்கு மீண்டும் எனக்குக் கிடைத்திருக்கின்றன.

இங்கிலாந்தில் ஓரிடத்தில் 'கோல்ஃவ்' விளையாட்டு மைதானம் ஒன்று இருக்கிறதாம். இவ்விளையாட்டில் உபயோகப்படும் பந்து ஒரு சிறிய கோழிமுட்டையளவில் இருக்கும்! அங்கு வசித்த ஒருகாகம்இப்பந்தை ஒருவர் அடித்தவுடன், கோழிமுட்டை என்று நினைத்தோ என்னவோ, அதைத் தூக்கிக்கொண்டு போய்விடுமாம். இப்படியே ஐந்தாறு பந்துகள் திருடப்பட்டபின் காகத்தை ஒருநாள் சுட்டுக் கொன்றுவிட்டார்களாம். ஆனால் அடுத்தநாளும் பந்து களவுபோய்விட்டது! திருடும் காகத்தை அவர்கள் சுடவில்லை!

காகம் குறிபார்த்து வீசும் பொருள் ஒன்றேஒன்றுஇருக்கிறது. என்ன தெரியுமா?

யாழ்ப்பாணம் பண்டாரவிடிலுள்ள ஒருவாகை மரத்தின்கீழ் பஸ்ஸுக்காகக் காத்துக்கொண்டு நிற்பவர்களுக்கு அது என்னென்று தெரியும்!

—வழிப்போக்கன்

### அரசாங்க நடவடிக்கைக்கு பட்டினசபை பாராட்டு

வல்வெட்டித்துறை. ஞாயிறு

வல்வெட்டித்துறை பட்டினசபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு. வி. இரத்தினவடிவேலு தலைமையில் நடைபெற்றபொழுது பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன,

தேசிய அரசாங்கத்தின் இலவசஅரிசித்திட்டத்தைப் பாராட்டுவதுடன், இப்பட்டினசபை எல்லைக்குள் வசிக்கும் வணக்காரர்கள், கூடுதலான நெல் வயல்களைக் கொண்டவர்கள் தங்கள் கூப்பன்களை வடமராட்சிக் காரியாதிகாரியிடம் ஒப்படைக்கும்படியும் இச்சபை வேண்டுகோள் விடுக்கிறது.

இப்பகுதியில் இராணுவத்தினரின் தாக்குதல் நடவடிக்கைகள் குறித்து எமதுசபையும் சமாசனப்பட்டினசபையும் அக்கறைகாட்டுவதுபோன்று மற்றும் உள்ளூராட்சி மன்றங்களும் இது விஷயமாக அக்கறை காட்டும்படியும் சபை வேண்டுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வேலை அனுபவத் திட்டம்

# மயானத்தை திருத்திய பத்து வயதுச் சிறுவர்கள்

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

மற்றைகளும், பாம்புப் புற்றுகளும்நிறைந்த பொக்கணைச் சுடுகாட்டை, ஊரெழு கணேசவித்தியாசாலை, ஊரெழு மெதடிஸ்தமிஷன் பாடசாலை மாணவர்கள் திருத்தியமைத்தனர். இதில் கலந்துகொண்ட ஐம்பது மாணவர் பத்துவயதுச் சிறுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

"வேலை அனுபவ" இரண்டாம் தினமாகிய விழாவன்று, ஆசிரியர் திருவாளர்கள் எஸ் வைத்திலிங்கம் கே. குலத்துங்கமுதலியார் மி. ஐயாத்துரை ஆகியோரும் பங்குகொண்டு மாணவருடன்சேர்ந்து வேலை செய்தனர்.

ஊரெழு கிராமமுன்னேற்றச்சங்கத்தலைவர் சிறுவரைப்பாராட்டிச் சிற்றுண்டி வழங்கினர்.

## சுன்னாகத்தில்

குரும்பசிட்டி, ஞாயிறு

தொழிலாளர் மகிமையை உணர்ந்து மதிப்பு, கௌரவம் அளிக்கவேண்டும். தொழில் புரிபவர்களை சாதி வகுப்புப்பேதம் பாராட்டி சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கக்கூடாது. என்று உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில்மாணவர்வேலை அனுபவத்திட்டத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். முன்னாள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிஅதிபர் திரு. சி. சுப்பிரமணியம்தலைமையில்இவ்விழா நடைபெற்றது.

1932-ல் இலங்கையைத் தாக்கியமலேரியாநோயைப் பிரசாரமூலம் எவ்வகையில் அழித்தோமோ அதே வகையில் வேலை அனுபவத்திட்டமூலம் உணவுப்பிரச்னையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்" என்றும் இவர் கூறினார்.

திரு. ச. வேலின்பநாயகம் பேசுகையில், பிறதேசங்களை எப்போதும் எதிர்பார்த்திருக்கக்கூடாது. உணவுப் பிரச்னையை அரசியல் கட்சிகளின் பிரசாரங்களுக்கு மட்டும் பயன்படுத்தாது இன, மத வேறுபாடுகளின்றி இலங்கையர் என்ற தேசிய ரீதியில் சகலரும் தமது ஒத்துழைப்புக்களைக் கொடுக்க வேண்டும். நமது நாட்டில் இயந்திர நவநாகரீகங்கள் தோன்றவில்லை. எனவே, கால்நடைகளை வளர்த்து பொருளாதார அபிவிருத்திக்கு மக்கள் உதவ வேண்டும்" என்றார்.

உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் உடுவில் வட்டார வித்தியாதிகாரி எஸ். இராசா, வி. சுப்பிரமணியம் திரு. சி. சுப்பிரமணியம் உட்பட பலரும் இவ்விழாவில் பேசினர்.

## மானிப்பாயில்

மானிப்பாய், ஞாயிறு

"நடைமுறையிலிருந்து வரும் ஏட்டுக்கல்விமுறையால் பட்டதாரிகள்கூட அரசாங்க உத்தியோகமோ, வேறுஉத்தியோகமோ கிடையாமல் திண்டாடுகின்றனர். ஏட்டுக்கல்வி முறையை விட்டு ஒவ்வொரு மாணவரும்வேலை அனுபவத் திட்டத்தில் ஈடுபட வேண்டும்" என்று வடபகுதி வித்தியாதிபதி திரு எஸ். தணிகாசலம் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் மானிப்பாய் வட்டாரப் பாடசாலைகள்கலந்து சிறப்பித்த மாணவர்வேலைஅனுபவத்திட்ட விழாவில் பேசுகையில்கூறினார். விழாவிற்கு சமூகஜோதி கே.டீ. முதலியார் இ. தியாகராசா தலைமைவகித்தார்.

மானிப்பாய் பட்டின சபைத்தலைவர் திரு. இராஜேந்திரம் பேசுகையில், காலஞ்சென்ற இந்துக்கல்லூரி அதிபரும், பாராளுமன்ற அங்கத்தவருமான திரு வீரசிங்கம் தமது காலத்தில் எடுத்த முயற்சிகளையே இன்றைய அரசாங்கம் காலம் தாழ்த்தியபின் நடைமுறைக்குக்கொண்டு வருவதாக கூறினார்.

வலிகாமம்மேற்கு காரியாதிகாரி திரு. ந. மாணிக்கநடராஜா பேசுகையில்; உலக சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டின் காரணமாக வேலையனுபவத் திட்டம் மூலமாக பிரச்னைக்கு தீர்வுகாண முனைந்திருக்கிறோம் என்றும் சமுதாயத்தின் உயிர்நாடியான விவசாயிகளுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிப்பது அவசியமென்றும் கூறினார்.

## உரும்பராயில்

உரும்பராய், ஞாயிறு

உரும்பராய் இந்துக் கல்லூரி மாணவ, மாணவிகள் சிரமதானத்தில் ஈடுபட்டு பாடசாலைத் தோட்டத்தில் வேலைசெய்தார்கள். மாணவிகள் பாடசாலைத் தோட்டத்தில் நிலம் துப்பரவாக்குதல் விதைகள்நடுதல் போன்ற வேலைகளிலும் மாணவர்கள் கிராமத்திலுள்ள வேம்பன் மயானத்தைதுப்புரவாக்கும் வேலையிலும் ஈடுபட்டார்கள். திரு. ஆறுமுகம், திரு. இளையதம்பி ஆகிய ஆசிரியர்களின் தலைமையில் சிரமதானவேலைகள் நடைபெற்றன.

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையைச் சேர்ந்த 800க்கும் அதிகமான மாணவ மாணவிகள் பாடசாலை வளவைத்துப்பரவாக்கும் வேலையில் ஈடுபட்டார்கள்.

## சங்கானையில்

சங்கானை, ஞாயிறு

வேலையனுபவத்திட்ட விழா சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்றது. தேசியக்கொடியுடன் பாடசாலைக் கொடியையும் ஆசிரியர் திரு பொ. மணிடசேகரம் ஏற்றி வைத்தார். பாடசாலை மாணவிகளால் தேசியகீதமும் பாடசாலைகீதமும் பாடப்பெற்றன தலைமையாசிரியர் பண்டிதர் க. மயில்வாகனம் பேசுகையில்:- கல்விப்பகுதியார் மேற்கொண்டுள்ள திட்டம் பாடசாலைப்படிப்பை முடித்துவிட்டு வெளியேறும் ஒவ்வொரு மாணவனையும் தன்னில் தங்கிவாழும் தகுதிஉள்ளவனாக்கும். என்று குறிப்பிட்டார்.

சங்கானை விவசாயவிஸ்தரிப்புத்திட்ட மேற்பார்வையாளர் திரு க. சண்முகவேல் மாணவர்கள் கமத்தொழிலில் ஈடுபடவேண்டியகாலம் வந்துவிட்டது என்றும் பாடசாலையில் தோட்டங்களை வைப்பதோடு நிற்காது வீடுகளிலும் தோட்டங்களை வைத்து நாட்டுக்கு நலன் புரியவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பெயர்ப்பலகைகள் எழுதுதல், பாடசாலைவெளிப் புறத்தை செதுக்கித் துப்பரவு செய்தல், கட்டுதல் பயிரிடுதற்கமைந்தநிலத்தைகொத்திப்பண்படுத்தல், பாடசாலை உட்பகுதியைக் கழுவிச் சுத்தம்செய்தல், கரும்பலகைக்கு கழிவுமைபூசுதல், பாடசாலைசுற்றுப்புற வேலிகளில் சிதைந்தபகுதிகளை செப்பஞ்செய்தல் மலகூடப்பகுதியை தூய்மைசெய்தல் களஞ்சிய அறையை ஒழுங்குசெய்தல், உடைந்த ஓடுகளை மாற்றுதல் முதலிய பல வேலைகளில் மாணவர்கள் ஈடுபட்டனர்.

# திரைப்பட அதிபர் வாசுவின் வாக்குமூலத்தின் முக்கியத்துவம்

## எம். ஜி. ஆர்., ராதா குணமடைகின்றனர்

சென்னை ஜன. 15

**எம். ஜி. ஆர்.—ராதா துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின்போது கூட இருந்த 'முத்துக்குமரன் பிலிம்ஸ்' உரிமையாளர் வாசு தமது வாக்குமூலத்தில் என்ன சொன்னார்? இதில்தான் உண்மை நிகழ்ச்சியைத் தெரிந்து கொள்ளலாமென கருதப்படுகிறது.**

"நடிகவேள்" ராதாவை புரட்சி நடிகர் சுட்டபோது தான், தற்பாதுகாப்புக்காக ராதா அவரை பின் சுட்டாராம். எம். ஆர். ராதா பொலிஸாருக்கு அளித்திருக்கும் வாக்கு மூலத்திலேயே இப்படித் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. ராதாவின் வாக்குமூலத்தால் ஏற்பட்டிருக்கும் இந்தத் திடீர் திருப்பம் வாசுவின் வாக்குமூலத்துக்கு பெரிதும் முக்கியத்துவம் கொடுத்துள்ளது. வாசு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் வாசுவின் வாக்குமூலத்தை இதுவரை வெளியிடாமல் வைத்திருப்பதால், அதில் ஏதாவது 'உண்மைச் சம்பவங்கள்' அடங்கியிருக்கலாம் எனக் கருதவும் இடமிருக்கிறது. வாசுவின் வாக்குமூலத்தைக் கடைசிவரையும் பொலிசார் இரகசியமாகவே வைத்திருந்து, வழக்கின் போதே வெளியிடக் கூடுமெனவும் கிடைத்த ஒரு செய்தி கூறுகிறது.

### பொலிஸ் கமிஷனர்

நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் சுடப்பட்டது பற்றி தமிழ்நாடு தலைமைப் பொலிஸ் அதிகாரி திரு. அருள் கூறியிருப்பதாவது:-

வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு எம். ஜி. ராமச்சந்திரனுக்கு எம். ஆர். ராதா டெலிபோன் செய்தார். வீட்டுக்கு வந்து பேசலாமா என்று போனில் அவர் கேட்டார்.

எம். ஜி. ராமச்சந்திரன் சம்மதித்தார். ஆகையால் பட அதிபர் வாசுவுடன் எம். ஜி. ஆரின் பங்களாவுக்கு ராதா போனார்.

ராமச்சந்திரனுக்கும் ராதாவுக்குமிடையில் ஒரு சினிமா சம்பந்தமாக ஒரு தகராறு இருந்தது. திடீரென்று ராதா தமது துப்பாக்கியை எடுத்து ராமச்சந்திரனை சுட்டார். ராமச்சந்திரனுக்கு காதில் காயம் ஏற்பட்டது பிறகு ராதா தன்னைத்தானே சுட்டார். இதுதான் பொலிஸ் அதிகாரியின் அறிக்கை.

நமக்குக் கிடைத்த தகவல் கூறுவதாவது:-

'பெற்றால்தான் பிள்ளையா?' படத்தைத் தயாரித்தவர் தான் வாசு. இந்தப் படத்தில் எம். ஜி ஆர் கதாநாயகனாக நடித்துள்ளார். ராதாவும் நடித்துள்ளார். இந்தப்படத்தை எடுப்பதற்கு ராதா வாசுவுக்கு ஒரு லட்சம் ரூபா கடனாகக் கொடுத்து உதவியிருந்தாராம். இதற்கு எம்.ஜி. ஆர். பொறுப்பாக நின்றாராம். இந்தக் கடன் பற்றித்தான் வாசு-ராதா-எம். ஜி. ஆருக்கிடையே பேச்சுவார்த்தை அன்று நடந்ததாகவும் கூறப்படுகிறது.

சென்னை பெரிய அரசாங்க ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் எம். ஜி. ஆருக்கு அருகே, அவர் மனைவி (முன்னாள் நடிகை) வி. என். ஜானகி வைத்த கண் வாங்காமல் கூடவே இருக்கிறார். எம். ஜி. ஆரைப் பார்ப்பதற்கு சிலருக்கு அனுமதிவழங்கப்பட்டபோதிலும், அவருடன் பேசுவதற்கோ, நீண்ட நேரம் நிற்பதற்கோ அனுமதி வழங்கப்படவில்லை.

எம்.ஜி ஆரின் அண்ணன் சக்ரபாணி ஆஸ்பத்திரியிலேயே இருக்கிறார். எம். ஜி. ஆரைப் பார்க்கவருபவர்களெல்லாம் சக்ரபாணியைச் சந்தித்து ஆறுதல் கூறிச் செல்கின்றனர்.

27ம் வார்ட்டிலிருக்கும் ராதாவுக்கு அருகே அவரது மனைவியான கீதா (இலங்கையர்) வும் மகனும் இருக்கின்றார்கள்.

ராதா ஆபத்தான நிலைமையைக் கடந்துவிட்டதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். ராதாவைப் பார்ப்பதற்கு யாரும் அனுமதிக்கப்படவில்லை. எம். ஜி. ஆரும் ராதாவும் குணமடைகின்றனர்.

# மாணவர்கள் சிரமதானம்

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மாணவர்கள் சிரமதானமூலம் [illegible] கல்லூரியில் உபயோகிக்கப்படாதிருந்த தளபாடங்களைத் திருத்தம் செய்தனர். தொழிலாளரின் புதிய வசிப்பிடத்தையும் வல்லை அம்மன் கோவில் வீதியையும் இந்திராணி ஆஸ்பத்திரி வளவையும் இவர்கள் சுத்தம் செய்தனர்.

# "சாதிக்கட்டுப்பாடு வளரும்"

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

"யாழ்ப்பாண உயர்சாதி ஏழைமக்களையும், சிறுபான்மைத்தமிழரையும் தலை நிமிர்த்திருக்கமுடியாது தலைவலிக்கும் ஓர் இரும்புக்கம்பிவேலியே வெள்ளையறிக்கையாகும். வெள்ளையறிக்கை பூரணமாகச் செயற்பட ஆரம்பித்தால் சாதிவேறுபாடுகள் தொடர்ந்து வளர்வதுடன் இலவசக்கல்வியும் பெரிதும் பாதிக்கப்படும்" என்று யாழ். பிரதேச கம்யூனிஸ்ட் கட்சிக்காரியதரிசி திரு ஐ. ஆர். அரியரத்தினம் உரும்பிராயில்நடைபெற்ற வாலிபர்சங்கக் கூட்டமொன்றில் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்

திரு. டொமினிக்ஜீவா பேசுகையில் 1953ல் அரிசிவிலை உயர்வை எதிர்த்த தமிழ்அரசுக் கட்சிகள் இன்று தமது கொள்கைகளை உதறித்தள்ளிவிட்டு, அரிசி வெட்டை வரவேற்பிலிருந்து அவர்கள் எந்தவர்க்கத்தை ஆதரிக்கிறார்கள் என்பது தெளிவாகிறது" என்றார்.

# கோவிலில் பலி நிறுத்தம்

யாழ்ப்பாணம், திங்கள்

நீண்டகால முயற்சிகளுக்குப் பின்னர் அளவெட்டி தெற்கு முத்துமாரியம்மன் கோவிலில், பலியிடுவது நிறுத்தப்பட்டுள்ளது. கோவில் மணியம், பூசகர் ஆகியோரின் தீவிர முயற்சிகளைத் தொடர்ந்து பொதுமக்களின் ஆதரவுடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இப்பொழுது இக்கோவிலில் இரு நேரப் பூசை நடைபெற்றுவருகிறது.

# பஸ்சேவை நிறுத்தப்பட்டது

கோண்டாவில், ஞாயிறு

கோண்டாவில்-பலாலி வீதிச்சந்தியிலிருந்து இருபாலைவீதி பிறவுன்வீதி வழியாக யாழ்-பஸ் நிலையத்தை அடையும்பஸ் கடந்த ஒரு மாதகாலமாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனால்பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



இந்தக் குடும்பத்துக்குப் பிரகாசமான எதிர்காலமுண்டு....

நம்பிக்கை சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது; காரணம், அவர்களின் அங்கத்தின் ஒவ்வோர் அணுவிலும் ஆரோக்கியத்தின் பூரிப்புப் பொங்கித் ததும்புவதாகும். அப்பா எப்பொழுதும் சுகமும் பலமுமுள்ளவராய் இருக்கிறார். அம்மா என்றுமே குன்றா இளமையும், குலையா வனப்புமுள்ளவராய்க் காட்சியளிக்கிறார். இரண்டு குழந்தைகள். எந்தப் பெற்றோர்தான் இவர்களைப் பார்த்துப் பெருமையடையாதிருப்பர். இதுவே செவன் சீஸ் அளிக்கும் ஆரோக்கியம். உச்ச போஷாக்குள்ள எண்ணெயில் விட்டமின் ஏ., டி. ஆகிய சத்துக்கள் இயற்கையாகவே செறிந்திருக்கும் பொருளே செவன் சீஸ் கொட் லிவர் எண்ணெய். செவன் சீஸ் கொட் லிவர் எண்ணெய் அதன் பூர்வ கொள் கலத்தில் நேரே உங்களுக்குக் கிடைக்கிறது.

செவன் சீஸ்

செழுமை மிக்க பொன்னிற கொட் லிவர் எண்ணெய், குளிகைகள்.

உற்பத்தியாளர்களின் சொந்தப் போத்தலிலேயே அடைக்கப்பெற்ற அசல் செவன் சீஸ் கொட் லிவர் எண்ணெயே [illegible]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முற்போக்கு வாலிபர் இயக்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
போராட்டமின்றி எமது உரிமைகளை நாம் பெற்று விடமுடியாது. எனவே இந்த நாட்டில் ஏற்படும் போராட்டங்களை அங்கீகரித்து எமது உரிமைகளை இந்த வேளையில் நிறைவேற்றத் தவறினால் பின்னர் நாமே கவலைப்பட வேண்டுமென்று கந்தர்மடம் முற்போக்கு வாலிபர் இயக்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து பேசுகையில் திரு.கே. டானியல் தெரிவித்தார். இதன் தலைவராக திரு.சி. இராசவும், உபதலைவராக வை. இராசதுரையும், இணைச்செயலாளர்களாக அ. குணசிங்கம், இ. பூலிங்கம், ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டதோடு 9 பேரைக் கொண்ட நிர்வாகக் கமிட்டி ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## "ஐக்கியத்தினால் வெற்றி பெறுவோம்"

இமையாணன், ஞாயிறு
"கட்சி ரீதியில் வேறுபட்டு நிற்கால் இலங்கையில் உள்ள சகல தொழிற் சங்கங்களும் ஒன்று சேர்ந்து 'ஐக்கிய முன்னணி' ஒன்றை உருவாக்கி ஒற்றுமையாகி, அதன் மூலம் விடுதலை பெறவேண்டும்" இவ்வாறு மருத்தித்துறை இலங்கோவில் நடைபெற்ற மீன் தொழிலாளர்களின் கூட்டம் ஒன்றின் போது திரு. மு. சோமசுந்தரம் தலைமை வகித்துப்பேசும்போது கூறினார். இலங்கை வோக்கு வரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவில் உள்ள சகல சங்கங்களின தும் கூட்டு முன்னணியின் ஆதரவில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இன்னும் பலர் பேசினார்கள்.

## வீடு தீக்கிரை

குரும்பசிட்டி, ஞாயிறு
கட்டுவன் கிராமத்தைச் சேர்ந்த இன்னுசிங்னோகரன் என்ற வாலிபர் வசித்து வந்த, குடிசை வீடு, இனம் தெரியாத சிலரினால் முற்றாக தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இவரது பாவனைப்பொருட்களும், அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்களும் சாம்பலாகி விட்டதாகத் தெரிகிறது. காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் இது சம்பந்தமாகப் புகார் செய்யப்பட்டதை யடுத்துப் பொலிஸார் நான்கு சந்தேக நபர்களை விசாரணைக்காகத் தேடுகின்றனர்.

## திருவாசக போட்டி முடிவுகள்

சுழிபுரம், ஞாயிறு
சித்தங்கேணி திருமுறைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற திருவாசகம், திருப்பள்ளி எழுச்சி மனனப் போட்டியில் பின்வருவோர் பரிசுபெற்றனர்.

மேற்பிரிவு

செல்விகள்: ந. யோகராணி, நி. நித்தியலட்சுமி, இ. யோகராணி, ந. சத்தியபாமா.

கீழ்ப்பிரிவு

செல்விகள்: ச. ரஞ்சனி, மா. சந்திரா, இ. செல்வராணி.

# பி. எஸ். ஏ. சைக்கிள் ஓட்டப்பந்தயம்

## "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் ஆதரவில் நடாத்தப்படும்

### விபரங்கள்

ஜனவரி 25, 1967 — பி. ப. 4-00 மணி

**முதலாவது ஓட்டப்பந்தயம்**

**மாணவர் போட்டி**

ஐந்துமைல் — யாழ். கோட்டையைச் சுற்றி

முதலாவது பரிசு: பி. எஸ். ஏ. சைக்கிள்
இரண்டாவது பரிசு: கிரிக்கெட் மட்டை

ஜனவரி 25, 1967 — பி. ப. 4-30 மணி

**இரண்டாவது ஓட்டப்பந்தயம்**

**வயது வந்தோர் போட்டி**

பத்துமைல் — யாழ். கோட்டையைச் சுற்றி

முதலாவது பரிசு: பி. எஸ். ஏ. சைக்கிள்
இரண்டாவது பரிசு: இரண்டு அடுப்பு "டைமண்ட்" குக்கர்

### விதிகளும் நிபந்தனைகளும்

**முதலாவது ஓட்டப்பந்தயம்**

1. பங்குபற்றுவோர் யாவரும் ஜனவரி 1, 1967-ல் 18 வயதோ அல்லது அதற்குக் குறைந்தவர்களாகவோ இருக்க வேண்டும்.
2. பந்தயத்தில் பங்குபற்றப் போதிய உடலுறுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.
3. 'ஈழநாடு'வில் வெளியாகும் கூப்பன் பத்திரங்களிலேயே எல்லா விண்ணப்பங்களும் அனுப்பப்பட வேண்டும்.
4. பங்குபற்றுவோர் பி. எஸ். ஏ. சைக்கிள்களிலேயே ஓட வேண்டும்.
5. விண்ணப்ப முடிவு திகதி: ஜனவரி, 20, 1967.
6. முடிவு திகதிக்குப் பின் அனுப்பப்படும் விண்ணப்பமெதுவும் ஏற்றுக் கொள்ளப்படாது.
7. ஓட்டப்பந்தய முடிவுக்குப்பின் எவ்விதக் கடிதத் தொடர்பையும் "ஈழநாடு" ஏற்காது.
8. மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.
9. ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் 5½ கூப்பன்கள் இணைக்கப்பட வேண்டும். போட்டிக் கூப்பன்களை சைக்கிள் ஓட்டப் போட்டி, 'ஈழநாடு' த. பெ. எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

**இரண்டாவது ஓட்டப்பந்தயம்**

இதில் கலந்துகொள்வோர் யாவரும் ஜனவரி 1, 1967-ல் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

மற்றும்படி, முதலாவது ஓட்டப்பந்தயத்துக்கான விதிகளும், நிபந்தனைகளும் இரண்டாவது ஓட்டப்பந்தயத்துக்கும் உரியனவாகும்.


### அறிவிப்பு

தவிர்க்க முடியாத காரணங்களால் 'ஈழநாடு' சைக்கிள் ஓட்டப் போட்டி 1967 ஜனவரி 25-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள தென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மற்றவர்களை முந்திச் செல்ல

BSA

பி. எஸ். ஏ.
கோல்டின் டி லக்ஸ்
ரேட்ஸ்டர் சைக்கிள்களையே
தெரிவு செய்யுங்கள்



- உலகிலேயே மிகச் சிறந்த சைக்கிள்
- நீடித்த உறுதி வாய்ந்தது
- வசதிக்குச் சாதகமான அமைப்பு
- 'டெரி-டைப்' சீட்டுகள்

துரிதமான பாதுகாப்பான ஓட்டத்துக்கு ஒரு பி. எஸ். ஏ. யில் செல்லுங்கள்

ஏகவிநியோகஸ்தர்கள்:

கார்கில்ஸ் (இலங்கை) லிமிட்டெட்

### கூப்பன்

1. யான் 18 வயதுக்கு மேற்பட்டவன் / உட்பட்டவன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன். யான் முதலாவது / இரண்டாவது போட்டியில் பங்குபற்றுகிறேன். (தேவையற்ற சொல்லை வெட்டிவிடவும்.)
2. இந்த சைக்கிள் போட்டி சம்பந்தமான சட்டங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட நடந்துகொள்வேன்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

இலக்கம்: ..............................

[பி. எஸ். ஏ. சைக்கிளின்பிரேம் (frame)]
(கோட்டிக் வெட்டி எடுக்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘விளையாட்டுகள் ஏற்றத் தாழ்வுகளை மறைத்துவிடும்’

## மைதானத்திறப்பு விழாவில் உடுப்பிட்டி எம்.பி.

உடுப்பிட்டி, ஞாயிறு

“விளையாட்டுத்துறை தமிழர்களின் பண்டைய வரலாற்றோடு நெருங்கிய தொடர்புள்ளது. தமிழர்களிடையே வீரத்தையும், உடல் வலத்தையும் ஏற்படுத்தவன விளையாட்டுக்களேயாகும். விளையாட்டுப் போட்டிகள் சமூக ஏற்றத் தாழ்வுகளை மறையச் செய்துவிடும். விளையாட்டுப் போட்டிகளில் இளைஞர்கள் மட்டுமல்லாமல், வயதானவர்களும் பங்குபற்றவேண்டும். மேல்நாடுகளில் அரசாங்கங்கள் இத்துறையில் அதிகம் கவனம் செலுத்திவருகின்றன. லண்டன், அமெரிக்கா போன்ற இடங்களில் சிறந்த விளையாட்டுவீரருக்கு பாதி சம்பளம் கொடுத்துவருகின்றனர். இலங்கையில் நாம் எமது தேவைகள் அனைத்திற்கும் அரசாங்க உதவியை நம்பியிருக்கின்றோம் ஆனால் அரசாங்கம் ஒரே சமயத்தில் எமது தேவைகளை நிறைவேற்றமுடியாது. எமது தேவைகளை நாமே நிறைவேற்றத் தயாராக இருக்கவேண்டும்” என்று உடுப்பிட்டி எம் பி. திரு. மு. சிவசிதம்பரம் வதிரி “டைமண்ட்ஸ்” விளையாட்டுக் கழக புதிய உதைபந்தாட்ட மைதானத் திறப்பு விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்

திரு. மு சிவசிதம்பரம், எம். பி மேலும் பேசுகையில் கூறியதாவது:-

“ஒற்றுமைதான் சமுதாய வளர்ச்சியேற்படுத்தும் ஒரு நாட்டிலுள்ள சகல இனங்களும் ஒற்றுமையாக கருத்து வேறுபாடுகளின்றி வாழ்ந்துவந்தால் நாடு முன்னேற்றமடையும். பொருளாதார அபிவிருத்தியும் ஏற்படும். சமூகத்திலேற்படும் ஒற்றுமையின்மையே நாட்டின் பின் தங்கிய நிலைக்குக் காரணமாகும்.

மற்றும் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சின்னத்தம்பி. சைவப்புலவர் சி. வல்லிபுரம். திருவாளர்கள் என் சின்னத்தம்பி, என். அந்தோனிமுத்து, வ. தர்மலிங்கம் த. இராசலிங்கம் உட்பட வேறு பலரும் பேசினர்.

புதிய மைதானத்தில் முதன்முதலாக வதிரி டைமேர்ஸ் ‘ஏ’ பிரிவிற்கும் ‘பி’ பிரிவிற்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ‘பி’ பிரிவு 1—0 கோலால் வெற்றியீட்டியது. திரு. கே. தர்மசிறீராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். வதிரி டைமேர்ஸ் கோஷ்டிக்கும், கரணவாய் சிவானந்தா விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ‘டைமேர்ஸ்’ 1—2 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்குத் திரு. எஸ். கமலநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

---

## இளைஞர் ‘படையெடுப்பு’

பளை, ஞாயிறு

பச்சிலைப் பள்ளி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்துக்கு இளைஞர்கள் படை எடுத்த வண்ணமிருக்கின்றனர். ஜப்பான் காற்சட்டை துணி இங்குவந்திருப்பதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்தே இந்தப் படையெடுப்பு நடைபெறுகிறதாம். ஆனால் சங்கத்திற்கு அந்தத் துணி இல்லை என்ற பதிலே கிடைத்துள்ளதாம்.

---

# “கணேசையரது தொண்டுகள் நிலைபெறக் கூடியவை”

—எம். ஸ்ரீகாந்தா

பலாலி, ஞாயிறு

“தமிழை வளர்த்தவர்களில் கணேசையரும் ஒருவர். அவரது தமிழ்த் தொண்டுகள் என்றும் நிலைபெறக்கூடியதாகவுள்ளன.” என்று காணி அமைச்சின் நிரந்தர காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தா மடுதடி விநாயகர் கோவிலில் நடைபெற்ற கணேசையர் நினைவு விழாவிற்கு தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

கணேசையர் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட மண்டபத்தில் ஆராதனையுடன் விழா ஆரம்பிக்கப்பட்டது

திரு. ஸ்ரீகாந்தா தமது தலைமையுரையில் மேலும் கூறியதாவது:-

“கணேசையரைப் போன்ற தமிழ் முனிவர்கள் தமிழை வளர்த்தனர். அவர் போன்ற பெரியார்கள் தொண்டு செய்து தமிழை நிலைநாட்டியதால் தான் நாம் தமிழன் என்று தலைநிமிர்ந்து நிற்கமுடிகிறது. தமிழைப் பலரும் பல வழியாலும் வளர்க்க ஆசைப்படும் இந்த நாளில் கணேசையரைப் போன்றவர்களுடைய தொண்டுகள் சிந்திக்கப்படவேண்டியது அவசியம்.”

பண்டிதர் திரு. இ. நமசிவாயம் பேசுகையில், கணேசையரின் புலமையைக் கண்டு தமிழகப் பேரறிஞர்கள் பாராட்டியிருக்கிறார்கள் என்றும் அத்தகைய பெரியார் ஒருவருக்கு அஞ்சலி செய்யவேண்டியது எமது கடமை என்றும் கூறினார்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் கதாப்பிரசங்கம் நிகழ்த்தினார்.

---

உடுப்பிட்டி, ஞாயிறு

யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கத்துடன் இணைந்துள்ள சகல விளையாட்டுக்கழக ஆதரவுடன் வருடந்தோறும் நடாத்தப்பட்டுவரும் ‘அப்போதிக்கரீஸ்’ வெற்றிக்கிண்ணத்திற்கான லீக் போட்டிகள் இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கின்றன.

---

## கிளிநொச்சி சாம்பியனானது

உரும்பராய், ஞாயிறு


கிளிநொச்சி விவசாயக் கோஷ்டிக்கும் கனகபுரம் விவசாயக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற இறுதிப்போட்டியில் கிளிநொச்சி விவசாயவளர்த்தகக் கோஷ்டி 1-6 கோல்களினால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக டாக்டர், குசைப்பிள்ளையும், டாக்டரும் கிளிநொச்சி எம்.பி.க. ரத்தினமும் கலந்துகொண்டார்கள் இப்போட்டிக்கு திரு. எஸ், குணரட்ணம் மத்தியஸ்தம் வகித்தார்.

---


## 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்


50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்

அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.




உங்களுடைய அடுத்த பெரிய சுவீப்புகளில்


முதல் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு அவர்களின் பரிசுத் தொகையிலிருந்து கீழ்க்காணும் கார்களை வாங்க சந்தர்ப்பம் அளிக்கப்படும்.



சீட்டிழுப்பு இல. 125

சீட்டிழுப்பு இல. 125. தேதி 19 ஜனவரி 1967
புத்தம் புதிய அஸ்டின் மினி ரூ. 11.500/-

சீட்டிழுப்பு இல. 126. தேதி 26 ஜனவரி 1967
புத்தம் புதிய பியட் 1100 ரூ. 12,300/-



சீட்டிழுப்பு இல. 126

இவை தீர்வை உள்ளடங்கிய சாதாரண கம்பெனி பட்டியல் விலைகளாகும். இந்த கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின் 14 நாட்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

